**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 9/2020**

நாள் 25.11.2025

PW1 – லோகநாதன்

த/பெ – அம்மாசை கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of November 2025)**

**9–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது அப்பா அம்மாசை கவுண்டருக்கும், ஒரு கணபதி கவுண்டருக்கும் இடையே குடும்ப சம்பந்தமாக போட்டி நிலவி வந்தது என்றால் இல்லை. அந்த கணபதி கவுண்டர் எனது அப்பாவின் முதல் தாரமான 3–ம் வாதி அம்மாசி அம்மாள் என்பவரின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆதியில் பைசுல்லா சாய்புக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்தை அவர் ஆயுட்காலம் வரை அனுபவித்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. பாவூதீன் சாய்பு மேற்படி பைசுல்லா சாய்புவின் மகன் என்றால் சரிதான். அந்த பாவூதீன் சாய்பு ஆங்கிலேயர் காலத்தில் முன்சீப்பாக (நீதிபதி) வேலை பார்த்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி பாவூதீன் சாய்புக்கு 5 மனைவி என்றால் அது எனக்கு தெரியாது. அந்த 5 மனைவிகளை ஒருவர் இறந்த பின்னிட்டு தான் ஒவ்வொருவரையும் திருமணம் செய்து கொண்டார் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த 5 மனைவிகள் மூலம் பாவூதீன் சாய்புக்கு 4 ஆண் மக்கள், 5 பெண் மக்கள் பிறந்தார்கள் என்றால் சரிதான். பாவூதீன் சாய்பு முன்சீப்பாக (நீதிபதி) பல இடங்களில் வேலை பார்த்து வந்ததின் பேரில் தாவா சொத்துக்களை பக்கத்து தோட்டத்துக்காரர்களான ராமசாமி கவுண்டர் மற்றும் கணபதி

கவுண்டர் ஆகியோருக்கு வாய்மொழி குத்தகைக்கு விட்டிருந்தார் என்று சொன்னால் ராமசாமி கவுண்டர் மட்டும் தான் குத்தகைக்கு சொத்தை பார்த்து வந்தார். அந்த பாவூதீன் சாய்புவின் 4 ஆண் மகன்களான சுல்தான் மைதீன் சாயபு, அப்துல் சுபான் சாயபு, அமிரூதீன் சாயபு, அமானுல்லா சாயபு ஆகியோர் பாவூதீன் சாயபுவின் 5–வது மனைவியான கைருன்பீ என்பவரிடமிருந்து 15.04.1956–ம் தேதியிட்ட பதிவு பாக பாத்திய விடுதலை பத்திரத்தை எழுதி பெற்றார்கள் என்றால் சரிதான். அதேபோல், பாவூதீன் சாய்புவின் 4 ஆண்மக்கள் பாவூதீன் சாய்புவின் 5 பெண் மக்களான ரொகையாபீபி, சுபியாபீபி, பீபிஜான், ஜம்ரூத்பீபி, பியாரிபேகம் ஆகியோரிடமிருந்து 16.04.1956–ம் தேதியிட்ட பதிவு பாக பாத்திய விடுதலை பத்திரத்தை எழுதி பெற்றார்கள் என்றால் சரிதான். அதனால், தாவா சொத்திற்கு மேற்படி பாவூதீன் சாய்புவின் ஆண் மக்கள் சுல்தான் மைதீன் சாயபு, அப்துல் சுபான் சாயபு, அமிரூதீன் சாயபு, அமானுல்லா சாயபு ஆகியோர் பெயரில் தான் பட்டா இருந்து வந்தது என்றால் சரிதான், எனது அப்பா அம்மாசை கவுண்டர் பெயரும் கூட்டாக தான் இருந்து வந்தது. எனது அப்பா அம்மாசை கவுண்டரின் பெயர் எப்போது பட்டாவில் சேர்க்கப்பட்டது என்றால் நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்தின் போது சேர்க்கப்பட்டது.

2. மேற்படி பைசுல்லா சாயபுவுக்கு 3 மகன்கள், ஒரு பெண் பிள்ளை என்று நாங்கள் சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி பாவூதீன் சாயபுவின் 4 மகன்களான சுல்தான் மைதீன் சாயபு, அப்துல் சுபான் சாயபு, அமிரூதீன் சாயபு, அமானுல்லா சாயபு ஆகியோர் சேர்ந்து ஒரு யாகூப் கான் என்பவரின் குழந்தைகளான 1 முதல் 10 பிரதிவாதிகள் மற்றும் 11–ம் பிரதிவாதியான கருப்ப கவுண்டர் ஆகியோருக்கு கடந்த 12.07.1966–ம்

தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் தாவா சொத்தான முழு சொத்தையும் கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றால் சரிதான், அவர்களுக்கு பொதுவில் 2/7 பங்கு சொத்து மட்டும் தான் அவர்களுக்கு பாத்தியம். மேற்படி 5 பெண் மக்களில் ஒருவரான பியாரி பேகம் என்பவரின் வாரிசுகள் தான் 7 முதல் 10 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

3. மேற்படி பாவூதீன் சாயபுவின் 4 ஆண் மக்கள் மேற்படி பாக பாத்திய விடுதலை ஆவணங்களை எழுதி பெற்ற பின் 10 ஆண்டு காலமாக சொத்தை அனுபவித்து வந்த நிலையில் தான் கடந்த 12.07.1966–ம் தேதியில் தாவா சொத்து முழுவதையும் கிரையம் கொடுத்து விட்டார்கள் என்றும், அவ்வாறு நாங்கள் சொல்வது போல அந்த பாவூதீன் சாயபு என்பவருக்கு உடன்பிறந்த சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் இருந்திருந்தால் சொத்தில் உரிமை கோரி வந்திருப்பார்கள் என்றும், அவருக்கு உடன்பிறந்தவர்கள் யாரும் இல்லை என்பதால் தான் சொத்தில் உரிமை கோரி யாரும் வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4. கணபதி கவுண்டரின் மகன்களான கந்தசாமி, முருகசாமி ஆகியோர் தாவா சொத்தான 31.05 ஏக்கர் சொத்து முழுவதையும் வாய்மொழி குத்தகைக்கு பயிர் செய்து வருவதாக சொல்லி அந்த குத்தகையை பதிவு செய்யக்கோரி திருப்பூர் வட்டாட்சியரிடம் மனு கொடுத்திருந்தார்கள் என்றால் இல்லை. அதேபோல் ராமசாமி கவுண்டரின் மகன்களான கந்தசாமி, துரைசாமி, வடிவேல் ஆகியோரும் தாவா சொத்து முழுவதையும் குத்தகைக்கு பயிர் செய்து வருவதாக சொல்லி அந்த குத்தகையை பதிவு செய்யக்கோரி திருப்பூர் வட்டாட்சியரிடம் மனு கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான், அவர்களுடைய குத்தகை பதிவு செய்து உத்தரவு பிறப்பித்தார்கள். அந்த குத்தகை பதிவு நடவடிக்கையில் எனது அப்பா

அம்மாசை கவுண்டர் வட்டாட்சியரிடம் ஆஜராகி மேற்படி ராமசாமி கவுண்டரின் மகன்களான கந்தசாமி, துரைசாமி, வடிவேல் ஆகியோர்கள் தான் தாவா சொத்து முழுவதையும் குத்தகைக்கு பயிர் செய்து வருவதாக வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதனால், தாவா சொத்தில் எனது அப்பா அம்மாசை கவுண்டர் எந்த காலத்திலும் சுவாதீன அனுபவத்தில் இருந்து அனுபவித்து வந்தது கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.37–ல் எனது அப்பா அம்மாசை கவுண்டர் பெயர் மட்டுமல்லாமல் மற்ற இந்த வழக்கின் 1 முதல் 11 பிரதிவாதிகளின் பெயர்களுக்கும் வந்துள்ளது என்றால் சரிதான். அதனால், அந்த புது திருப்பூர் வளர்ச்சி நடவடிக்கைக்காக மத்திய அரசாங்கத்தின் கீழ் சொத்துக்களை கையகப்படுத்த வேண்டி அனுப்பிய அறிவிப்பு தான் பி.வா.சா.ஆ.37 என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.37–ல் எனது அப்பா அம்மாசை கவுண்டர் பெயர் உள்ளதனாலேயே தாவா சொத்தில் உரிமை கோர முடியாது. ஆனால், தாவா சொத்தை மேற்படி திட்டத்துக்காக கையகப்படுத்தவில்லை என்றால் சரிதான்.

5. தாவா சொத்தில் ஒரு பகுதியை ரோடுக்காக வேண்டி 50 சென்ட் இடத்தை ஈட்டிவீரம்பாளையம் பஞ்சாயத்திற்கு பி.வா.சா.ஆ.11 செட்டில்மெண்ட் ஆவணத்தை 6,9,11 பிரதிவாதிகள் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், ஏற்கனவே அந்த வழியாக தடம் இருந்தது, தேவையில்லாமல் செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார்கள். நான் சொல்வது போல தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவித்து வந்தது கிடையாது என்றும், அதனால் தான் சொத்தின் உரிமையாளர்களிடமிருந்து பாதைக்காக வேண்டி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை 6,9,11 பிரதிவாதிகள் அவர்கள் பெயரில்

ஏற்பட்ட 12.07.1966–ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் பேரில் 15–ம் பிரதிவாதி எழுதி பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா சொத்து முழுவதும் 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கு மட்டும் தான் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா அம்மாசை கவுண்டர் நாகம்மாள் என்பவரை 2–வது திருமணம் செய்து கொண்டதால் தான் கணபதி கவுண்டருக்கும், எனது அப்பா அம்மாசை கவுண்டருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா பெயரில் ஏற்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான கிரைய ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அந்த கிரைய ஆவணங்களின் பேரில் நாங்கள் தாவா சொத்தில் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான கிரைய ஆவணங்களை எழுதிக்கொடுத்த நபர்களுக்கே தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றும், அதனால், அந்த கிரைய ஆவணங்களின் பேரில் நாங்களும் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல.

6. நாங்கள் சொல்லும் அசதுல்லா சாயபு, அசுரூதீன் சாயபு ஆகிய இருவரும் பைசுல்லா சாயபுவின் வாரிசுகள் என்பதை காட்ட வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறப்பு சான்றிதழ் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். அதேபோல் மேற்படி அசதுல்லா சாயபு, அசுரூதீன் சாயபு ஆகிய இருவரும் இறந்து போய்விட்ட நிலையில் அவர்களுடைய வாரிசு சான்றுகளையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அசதுல்லா சாயபு, அசுரூதீன் சாயபு ஆகிய இருவரும் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வந்தார்கள் என்பதை காட்ட பட்டா, சிட்டா அடங்கல் கணக்கு போன்ற வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். அதனால், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 கிரைய ஆவணங்களின் பேரில் தாவா சொத்தில் பொதுவில் 15–3/4 ஏக்கர் சொத்து உரிமை இருப்பதாக சொல்லி பாக தாவா தாக்கல் செய்ய எங்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தாவா சொத்து 12.07.1966–ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் படி 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கு மட்டும் தான் பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. அதனால், தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.25 14:42:31 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**